1992 பிப்ரவரி 7]

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே 1967 ஆவது ஆண்டிற்கு முன்பு பல யூனியன்களிலே டிராக்டர்கள் அரசினால் வாங்கிக் கொடுக்கப்பட்டு சாதாரண மக்கள் உபயோகப்படுத்தி வந்தார்கள். அதை மீண்டும் பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டு, நம்முடைய மதிப்பிற்குரிய அங்கத்தினர் அவர்கள் சொன்னது போன்று, எந்தெந்த யூனியன்களில் பணம் இருக்கிறதோ அந்த அந்த யூனியன்களிலாவது டிராக்டர்களை வாங்கி வைப்பதற்கான ஒரு நிலையை அரசாங்கம் உருவாக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர், அக்கா பொன்னம்மாள் அவர்கள் கேட்கின்ற கேள்வி, உள்ளாட்சித் துறையிலே ஒரு காலத்திலே இருந்தது. எனவே, அதுபற்றி தனிக் கேள்வி போட்டால், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் அதற்கு பதில் அளிப்பார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 94. திரு. கே. செல்வராஜ். மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

94—

உர விநியோகத்தைக் கண்காணிக்க குழு.

* 6148 திரு. கே. செல்வராஜ்:

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) விவசாயிகளுக்கு மானிய விலையில் கொடுக்கும் உரங்கள் முறையாக விநியோகிக்கப்படுகின்றனவா என கண்காணிக்க அரசு ஒரு குழு நியமிக்குமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது நியமிக்கும்?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) விவசாயிகளுக்கு மானிய விலையில் கொடுக்கப்படும் உரங்கள் முறையாக வழங்கப்படுவதற்கு வேளாண் உதவி அலுவலர்கள் அடையாள அட்டை வழங்குகிறார்கள். இதன் அடிப்படையில் உரம் வழங்கப்படுகிறது. இவை சரியாக வழங்கப்பட்டுள்ளதா என்பதை மேல் அலுவலர்கள் ஆய்வு செய்கிறார்கள். மேலும் இதனை உயர் அலுவலர்கள் தணிக்கை செய்கிறார்கள். எனவே இதனைக் கண்காணிக்க தனிக் குழு அமைக்கத் தேவையில்லை என்று இந்த அரசு கருதுகிறது.

திரு. கே. செல்வராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளுக்கு மானிய விலையில் கொடுக்கப்படும் உரங்கள், அதாவது ஒவ்வொரு வினியோக மையத்திற்கும் எவ்வளவு உரங்கள் கொடுக்கப்படுகின்றன? கொடுக்கப்படும் உரங்கள் முறையாக வினியோகிக்கப்படாமல், அந்த வினியோக மையத்திலே பணிபுரிகிறவர்கள் தவறாக அதிக விலைக்கு விற்பதாகவும் அவர்களுக்கு வேண்டியவர்களுக்கு மட்டும் அதிக உரங்களை வினியோகிப்பதாகவும் புகார்கள் வரும் நேரத்தில் வினியோக மையத்திற்கு நேரில் சென்று கண்காணிக்கவும் தவறு செய்யும் அரசு அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கவும் விவசாயிகளுக்கு உயர் மட்டக் குழு ஒன்றை அமைத்து, மாநில மாவட்டக் கிளைகள் விவசாய உரங்கள் வினியோகிக்கும் மையங்களுக்கும் சேர்த்து இந்தக் குழுவை அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா என்றும் அப்படி குழுக்கள் அமைக்கின்ற போது அதிகாரிகள் செய்கின்ற தவறுகளைக் கண்டுபிடித்து, உரங்களை விவசாயிகளுக்கு முறையாக வழங்குவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற தவறுகள் நடைபெறுவதாக அரசிற்கு எந்தப் புகார்களும் இதுவரையில் வரவில்லை. அப்படி எங்காவது நடைபெற்றிருக்கிறது என்று உறுப்பினர் அவர்கள் தனியாக என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து சொல்வார்களானால், தவறு செய்தவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கு மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவியினுடைய அரசு எப்போதும் தயங்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10–25

திரு. கே. செல்வராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானிய விலையில் வினியோகிக்கப்படும் உரங்கள் எந்த தேதியில், எப்போது, எந்தெந்த விவசாயிகள் வாங்குகின்ற வினியோக மையங்களில் விநியோகிக்கப்படுகின்றன என்பதனை விவசாயிகள் தெரிந்து கொள்ள அந்த உரங்களை முறையாகப் பெற்றுச் செல்லவும், அந்தந்த வினியோக மையங்கள் மூலமாகவோ பத்திரிகைகள் மூலமாகவோ விளம்பரப் பலகையாகவோ அறிவிப்பு வைப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 4,463 முதன்மை வேளாண்மை கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாகவும், தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை இணையம் மற்றும் நீலகிரி கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின் 6,258 விற்பனை மையங்களிலும் இந்த உரங்கள் வழங்கப்படுகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1992 பிப்ரவரி 7]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஆர். ஈஸ்வரன்.

திரு. ஆர். ஈஸ்வரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே, இருக்கக்கூடிய அனைத்து விவசாயிகளுக்கும் விவசாயச் செலவு, அதாவது உரச் செலவு கூடுதலாகத் தான் இருக்கிறது. அதே நேரத்தில் சிறு விவசாயிகளுக்கு சப்சிடி மூலமாகக் கொடுக்கும்பொழுது பல்வேறு தவறுகள் நடக்கின்றன. ஏனென்றால், சிறு விவசாயிகளுக்கு அங்கே இருக்கக்கூடிய வில்லேஜ் ஆபீசர்தான் சான்றிதழ் வழங்கவேண்டியிருக்கிறது. அப்படி இருக்கின்ற நேரத்தில் அவர் சான்றிதழ் கொடுப்பதற்கு அங்கே இருக்கக்கூடிய பட்டாதாரர்களே லஞ்சம் கொடுத்தால்தான் சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன. அந்த நிலைமையை மாற்றி அனைத்து விவசாயிகளுக்கும் முன்பு மாதிரி அதை நிரந்தரப் படுத்துவதற்கு, மத்திய அரசை தமிழ்நாடு அரசு வலியுறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய திருநாட்டிலே எந்த ஒரு மாநிலத்திலும் இல்லாத ஒரு முறையை தமிழகத்தினுடைய முதலமைச்சராக வீற்றிருக்கின்ற டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் காலத்திலே (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்திலே உள்ள அனைத்து விவசாயிகளுக்கும் அடையாள அட்டை வழங்குகின்ற திட்டத்தை இந்த அரசு செய்திருக்கிறது. அந்த அட்டையிலே ஒவ்வொரு விவசாயிக்கும் சொந்தமான நிலம் எவ்வளவு இருக்கிறது: குத்தகை நிலம் எவ்வளவு இருக்கிறது; அவர் கடந்த ஆண்டுகளிலே அதற்கு என்னென்ன மானிய விலைகளிலே இடுபொருள்கள் பெற்றிருக்கிறார் என்கின்ற விவரங்களும் குறிக்கப்பட்டிருக்கின்றன என்பதை பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 95. திரு. காஞ்சி பன்னீர்செல்வம், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

95—

உத்திரமேரூர் ஒன்றியத்தைப் பிரித்தல்.

*1752—திரு. காஞ்சி பன்னீர்செல்வம் :

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) 1 பேரூராட்சி, 73 ஊராட்சி, 234 கிராமங்கள் அடங்கிய உத்திரமேரூர் ஊராட்சி ஒன்றியத்தை இரண்டாகப் பிரிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது பிரிக்கப்படும் ?